உ
சிவமயம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும்,
கொக்குவில் பொற்பதி வீதியை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி.சங்கநிதி தபானந்தம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "சங்கமம்"

28-12-2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சமர்ப்பணம்



அன்பகலா துணையாய்
ஆருயிர் அன்னையாய்
அருமைச் சகோதரியாய்
பெருமைமிகு மைத்துணியாய்
இங்கிதமான மாமியாய்
ஈடிணையற்ற ஆசை அம்மாவாய்
குறையற்ற குஞ்சி அம்மாவாய்
பெரும் பேறான பேத்தியாய் நிறைவாழ்வு
வாழ்ந்து யாதும் ஊரே யாவரும் கேளிர் என
உறவுப் பாலம் அமைத்து
உணர்வூட்டி உயிரூட்டி
ஒப்புயர்வாக வாழ்ந்த அன்னையே !
நின் பாதகமலங்களுக்கு இந்நூல்
சமர்ப்பணம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! சாந்தி!!!**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# திருமதி. சங்கநிதி தயானந்தம்

அவர்கள்



அன்னை மடியில்
1935-07-09

ஆண்டவன் மடியில்
2018-11-28

திதி:- கார்த்திகை மாத அபர பக்க ஷஷ்டி

## திதிவெண்பா

விளம்பி ஆண்டு கார்த்திகைத் திங்கள் பன்னிரண்டாம் நாள்
பூச நட்சத்திரமும் அபரபக்க ஷஷ்டி திதியும்
சேரவே சங்கத் தமிழ் அன்னையவள் சங்கநிதியும்
சங்கமித்தாள் சிவன் கழலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'

21ம் ஆண்டு நினைவு.....

# அமரர் செல்லத்துரை தபானந்தம் அவர்கள்



## அமரர் தபானந்தம் அவர்கள்

தோற்றம் 12-02-1922

மறைவு 15-01-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப்பாக்கள்



## விநாயகர் துதி

மண்ணுலகத் தினிப்பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின்முற்றுறக்
கண்ணுதலுடைய தோர்களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்

## தேவாரம்

சங்கநிதி பதுமநிதி யிரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவர் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
வேரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடஉந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா! நீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுது அருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத்
திரைலோக்கிய கரத்தரனே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும்நான்
மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்கீழ்
இருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கருவினுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து – மதனாலே
கரியகுழல் மாதர் தங்கள டிசுவடுமார்பு தைந்து
கவலைபெரிதாகி நொந்து – மிகவாடி
அரகரசிவாயவென்று தினமுநினையாமல் நின்று
அறுசமய நீதியொன்று – மறியாமல்
அசனமிடுவார்கள் தங்கள்மனைகள் தலைவாசல்நின்று
அநுதினமு நாணமின்றி – யழிவேனோ

### அம்மன் துதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்னைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநிதி தபானந்தம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இலங்கைத் திருநாட்டில் இலங்கிடும் யாழ்நகரின் தென்பகுதியிலே சப்த தீவுகளின் தலைத் தீவாகத் துலங்குவது மண்டைதீவு. இத்தீவின் தலை வாசலிலே வழியிற் பிள்ளையார் வழிகாட்டியாகவும் வல்ல வினைகள் களைந்தருள்பவராகவும் வீற்றிருக்கின்றார்.

கற்புத் தெய்வம் கண்ணகி, வேப்பந்திடல் முத்துமாரி, முகப்புவயல் கந்தன், சிறுப்புலம் கந்தன், கண்டுப்புளியடி வீரபத்திரன், மேற்கு எல்லையிலே வீற்றிருந்தருள்பாலிக்கும் தில்லையீஸ்வரனார், திருவெண்காட்டில் அமர்ந்து இதமான இராஜகோபுரம் பதமாக மலர திருக்கொன்றை மலர் மணம் கமழ பெருமணியோசை ஓங்காரமாய் ஒலிக்க அமர்ந்திருந்து அருள்சொரியும் சித்தி விநாயகன் ஆலயம் தென்சாம்பல் கண்ணகி எனப்பல வைரவர் ஆலயங்களும், பெரியதம்பிரான் ஆலயமும் மிளிர்ந்து மெருகூட்டிட, இளம் தென்றல் காற்று இதமாகப் பவனிவர, பனை, தென்னை வளங்கள் அணிவகுத்துக் காட்சிதர செம்பாட்டுத்தோட்ட வெங்காயம் மங்காத செல்வம்தர நெல்வயல் மணிக் கதிர்கள் பாதைவழி இருபுறமும் மெல்லெனத் தலையசைத்து வரவேற்க கடல் உணவு வகைகள் கரைவந்து நரைசேர காலைக் கதிரவன் தன் பட்டொளியை வீசி வங்கக் கடல்தனில் பொன்னென மிளிரவைத்து ஆனந்தக் காட்சி தர அமைந்த எம் ஊரில் காராளர் கமநிலம் நோக்க, பள்ளிச்சிறார்கள் கலாசாலைக்கு விரைந்திடுவர். கற்றோரும், மற்றோரும் கண்டுணர்ந்த ஞானிகளும் கொண்டாடி மகிழந்தது எம்ஊராகும் முத்தமிழ் விழாக்கள், இசைவிழாக்கள் திருக்குறள் மாநாடுகள் அவற்றினூடே இசைக் கலைகள், நாடகக் கலைகள், பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள் எனப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக் காத்த எம்தீவில் மண்டைதீவு கிழக்கினை வதிவிடமாகக் கொண்ட ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் இல்லற வாழ்விலே ஆறுமுகம் அவர்கள் ஒரு சிறந்த விவசாயத்தில் நிபுனத்துவம் வாய்ந்தரவாகவும், பெருமையுடன் யாவரும் அவர் பெயர் கூறுமளவிற்கு தகுதி வாய்ந்தவராகவும், தனக்கென ஒரு பதிவினைத் தக்க வைத்துக் கொண்டவராகவும் வாழ்ந்து வரும் நாளில் இறைவழிபாட்டில் சைவ அனுட்டானங்கள் சரிவரக் கடைப்பிடித்து பயபக்தியுடன் வழிபாடியற்றி பிள்ளைச் செல்வங்களாக முக்கனிகள் மூவரை தம் நிதிகளாகப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தான முத்தாய், சொத்தான் சொத்தாய் முந்தித் தவமிருந்து முதல்மகளாய் உதித்த, பரமசிவன் பக்குவமாய் அழகுறப் படைத்த பதுமநிதியும் சங்கத் தமிழ் மணம்மகிழும், சைவ நெறி திகழ சற்புத்திரியாய் உதித்த சங்க நிதியும், கடைக்குட்டி மகளாய் கண்ணியமான தன்னலமின்றிப் பிறர்நலன் பேணும் தவநிதியையும் புத்திரிகளாய்ப் பெற்றுப் பெருமையும் பெற்றனர்.

கற்பனகற்றுக் கல்வியில் உயர்ந்து உயர்ந்த பெண்மணிகளில் மூத்த மகள் பதுமநிதி பக்குவமான அரச தாதியத் தொழிலை ஏற்று நடாத்தியவேளை காதல் மலர்ந்து, கட்டிழம்காளை நல்லூர் ப.நோ.கூ.சங்கம், நல்லூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளரும், வடமாகாண புறாக் பொன்ட் தேயிலை ஏஜன்டுமான கொக்குவில் குளப்பிட்டியைச் சேர்ந்த தமிழன் பாசறை அருணாசலம் என்பவரையும், இரண்டாவது மகள் சங்கநிதி என்பவர் மலைநாட்டிலே ஆசிரியத் தொழில் வாய்ப்புக் கிடைத்தும் அதனை ஏற்க மறுத்தார். அவர் துண்டுத் தாவணி தூய வெள்ளையில் பூண்டு பள்ளிப் பருவத்தைக் கழித்தவேளை, புகையிலை வர்த்தகன், புகழ்பூத்த கனவான் முலைகுடி பரம்பரையின் பெரும் சொந்த பந்தம் கொண்ட பெருமகனாம் செந்தமிழன் செல்லத்துரைக்கும், சீமாட்டி சிறப்பான பெண்ணாம் சின்னம்மாவும் இணைந்த இல்லற வாழ்வின் நல்லறப் பயனால் நலமாகப் பெற்றனர். ஐவரை மக்களாக அமரர்களான பவளக்கொடியாள் பவளம்மா, வித்தகி வியாழம்மா, பண்பாளன் பரமானந்தம், அருளாளன் அருளானந்தம், தயாள குணத்தோன் தகமையுடையோன் தபானந்தம்தனை மக்களாய்ப் பெற்று மனமகிழ் வெய்தினர். தபானந்தம் அவர்கள் சங்கநிதி என்பவரை பாடசாலை சென்று வரும் வேளைகளில் கண்டு மையலுற்றுக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார்.

கடைக்குட்டிமகளாம் தவநிதியும் தாதியத் தொழிலை மட்டக்களப்பு, யாழ் போதனா வைத்தியசாலை என்பவற்றில் தன்னிகரில்லாது ஆற்றி தாய் மாமன் மகனாம் ஆசிரியத் தொழிலை ஆர்வமுடன் ஆற்றி, ஆளுமை மிக்க அதிபராக , அதிகாரியாக உயர்ந்த, மகன் பழனிவேற் பிள்ளையின் காதலில் மருண்டு கட்டிய கணவனாய் ஏற்றே வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தபானந்தம் அவர்கள் இளமைப் பருவத்திலே வேலணை ப.நோ.கூ.சங்கக் கிளை முகாமையாளராகவும், இ.போ.சபை அரச மயமாக்கப்படுவதற்கு முன்னர் பஸ்நடத்துனராகவும், பிற்காலத்தில் இருபத்தி நான்கு வருடங்கள் மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் பாடசாலைக் காவலாளியாகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். எமது மண்ணிலே கௌரவமாகவும், சாதுர்ஜமாகவும் வாழ்ந்தவர். தன் மானமும் தளராத நெஞ்சமும், யாருக்கும் பின் செல்லாத இயல்பும் நியாயமான முறையிலே தனது வீரத்தையும் கொண்டு விபரமாக வாழ்ந்து தன் இனிய இல்லத்தரசி சங்கநிதியாளுடன் இணைந்த நல் இல்லறத்தின் பயனாக ஐந்து பிள்ளைச் செல்வங்களைப் பெற்றனர்.

முதல் செல்வமாக அருமை பெருமையாய் கிருபவானியைப் பெற்றுப் பூரிப்படைந்தனர். சீராட்டி வளர்த்துச் சிறப்புடன் முதல்தர மாணவியாக மலர்தல் கண்டு மகிழ் வெய்தினர் இவர் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றி இறுதியாக யாழ் வலயக் கல்வியில் பணியாற்றி ஓய்வுபெற்றார். இரண்டாவது ஆண்மகனாக ஒளிவண்ணன் பிறந்தார். கோட்டக்கல்வி அலுவலகம் வேலணையில் பணியாற்றி வருகின்றார். பெண்மகள் சோமமாலினி திருமணம் செய்து கனடாவிலும், கோகிலவண்ணன் யாழ்ப்பாணத்திலும், கடைக்குட்டி விஜயபாமன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சியிலே பணியாற்றி தற்போது பிரான்சில் வசித்து வருகின்றார்.

பிள்ளைச் செல்வங்களின் திருமண வாழ்க்கையிலே முன் மகளார் கிருபவானியை நெருங்கிய உறவினரான பணக்கார ராசா என அழைத்திட்ட பண்பாளன், பரிவுளம் படைத்தோன் சரவணபவனார் கரம் பற்றிக் கொண்டார். ஒளிவண்ணன் என்பவர் சொந்த மச்சாள் வசந்தமாலினி வளமிகு ஆசிரியையும், சோமமாலினி கொக்குவில் பொற்பதியைச் சேர்ந்த கனடா வாசியான நந்தகுமார் என்பவரையும், கோகுலவண்ணன் - தாதிய உத்தியோகஸ்தராக யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வசந்த ரோகினியையும், கடைசி மகன் விஜயபாமன் சரவணையைச் சேர்ந்தவரும் பிரான்சில் வாழ்பவருமான சுசிலா என்பவரையும், இல்லத் துணைகளாக ஏற்று வாழ்வதைக் கண்டு மகிழ்வடைந்து தம் இனிய மருமக்களாக மனதார ஏற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளைப் பேரானந்தமுடன் கண்டார். பிரான்ஸ் நகர் வாழும் கிருபவன் மற்றும் சாம்பவன், பிரணவன், சாயுக்ஸன், கேதாரணி, தவகேதன், கனடாவில் வாழும் பிரியங்கன், லதுசன், யாழ்நகர் வதியும் கோபிராம், கிருஸ்ணி ஆகியோரைக் கண்டு மகிழ்வெய்தினார்.

இவர் தம் இல்லறவாழ்வில் இனிது விருந்தோம்பி இறுதிவரை தனது கணவனின் ஓய்வுதியத்திலே இறுமாப்புடன் வாழ்ந்து தன்னாலான பங்களிப்புகளை உறவுகளுக்கு நல்கி, யாவரையும் அன்பாக அனுசரித்து வாழ்ந்து இறவாப் புகழுடனே தனது எண்பத்தி மூன்றாம் அகவையிலே தன் கொண்டவனை யடைந்திட இறைவனடி சேர்ந்தார்.

சுபம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்தமகளார் உள்ளத்திலிருந்து

என்னைப்பெற்ற நாள் தொட்டு - நீ
பிரியும் வரை எமை பிரியா திருந்தீர்
பிடிவாதம் வென்றதுவே பெருமை
தந்தாய் நீ அம்மா
துணை யிழந்தேன் துணை இருந்தாய்
அப்பாவை இழக்க மாட்டேன் என்றே
அசையாது எண்ணிடினும் 1997ல்
எமைப் பிரிந்தார் அப்பாவும்
அன்று தொட்டு இன்றுவரை அப்பாவாய்
அன்னையாய் அருமையான அம்மம்மாவை
அருகிருந்து கவனித்தீர் !
அதிகார தோரணையும், அடுத்துவரும்
பேச்சுக்களும் ஆணியாய் எனைக்குத்த
நின் பிள்ளை தானே நான்
நிமிர்ந்து கதைத் திடுவேன்
தொலை காட்சி முன்னாலே
தொடர்ந்திருக்கும் நின் கதிரை
நின்னைகாணாது அங்கும் இங்கும் பார்க்கின்றதே
வேலையால் நான் வரவே வெளிச்சம்
இல்லாது விறு விறுப்பாய் பார்த்திடுவாய்
தொடர் நாடகத்தை
கிரிக் கெற் பார்க்க வென்றே நின்பேரர்
கிளறி விட்டால் உன் கோபம்
உச்சத்தில் வந்திடுமே ஒரு போதும் தணியாது
குறையின்றி ஒழுங்காக பார்த்திடுவாய் ரிவி யினை
15 நாட்கள் தான்படுக்கையில் பார்த்ததினால்
மனதை ஆற்றுகின்றதுவே
ஓடி ஓடி வந்திடுவேன் மூன்று வேளையிலும்
வராது விட்டு விட்டால் முகம் சோகமாகிடுமே
அப்பாவை என் துணையை கண்டாயோ!
தாரமிழந்து தாயிழந்து - ஆனாலும்
தனையன்கள் வாழ்வுக்காய் தங்கியுள்ளேன்
நான் இங்கு தைரியத்தை தந்திடம்மா
தளராது மன நிலையை தந்திட நான்
வேண்டுகின்றேன் நின்தனக்கு
சொர்க்கம் தான் நிட்சயமே
சுகமாக தூங்கிடவே
நித்தம் வேண்டுகின்றோம்
நின் நினைவில் வாழுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு தூண்களாய் நான் பெற்ற நின் பேரர்கள்
நின் பிரிவால் தடுமாறி போயினரே
ஏலாது படுத்த போதும் பிரணவன் என்ற
பெயரை ஓயாது உரைத் தீரே நின்
பிரணவன் பித்துப் பிடித்தவன் போல்
பேயறைந்து கதறினானே!
கடல் கடந்த நாட்டில் நின்று
கண் கலங்கும் மூத்த பேரன் பார்க்கும் இடமெல்லாம்
அம்மம்மா... தெரிகிறார் அழியாத சொத்தாக
நின் அன்பு தனக்குண்டு என்றே ஆறுதல் அடைகின்றான்
சாம்பு, சாயு இருவரும் தமது துணை நீ என்றே
தளராது இருந்தார்கள்
தனிமையில் விட்டு நீயும் சடுதியாய் சென்றதனால்
துன்பம் தாளாது தவக்கின்றனரே!
யாவரினதும் உள்ளம் அமைதிபட ஒருவழி காட்டிடம்மா.

## மூத்தமகன் நினைத்து அழுதல்

துள்ளித் திரிந்த என்னைத் தூங்க வைக்கப்பாடியது
தள்ளுவண்டி ஓட்டியது தலைசீவிப் பொட்டிட்டு நடு உச்சி வார்ந்து பவுடர் பூசி
பள்ளிக்கனுப்பி பாதி வழி வந்து பக்குவமாய் அழைத்த உனை
பாடையிலே கட்டுதற்கு பாவ மென்ன செய்தனம்மா?

அப்பா குளிப்பாட்ட அங்கம் நீ தேய்த்திடுவாய் !
முழுக்காட்டும் போதினிலே என் நெற்றி பிடித்த உனை
இறுதி முழுக்காட்டி இதயம் குமுறுகிறேன்
நெஞ்சுருகி அழுகின்றேன் நெக்குருகிப் போனேன் யான்

உலகம் இருளுதம்மா ! உணவு வெறுக்குதம்மா !
அரிசித் தட்டுப் பாட்டினிலே ஆட்டாமாப் புட்டவித்து
ஆவலுடன் காத்திருக்க எமை அழைத்துத் தருவாயே !
குழல் பிட்டு என்றால் நாம் குதூகலம் அடைந்திருவோம் !

ஆனந்தம் கொண்டிடுவாய் மனஅமைதி அடைந்திடுவாய்
அதை நினைத்துப் பார்க்கையிலே அங்க மெல்லாம் சோருதம்மா !
அனலாய்க் கொதிக்குதம்மா !
என்னை நினைந்து நீபட்ட துன்பம் ஒன்று உண்டு

நின் துன்பம் களைந்தேன் நிரூபித்தேன்
அப்பாவின் பிள்ளையென ஆனந்தம் கொண்டாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதுன்பம் தான் மறந்து பரவசமடைந் தாயம்மா !
இந்நின்மதி ஒன்று போதும் அப்பாவுக்கும் அடைக்கூறு

அம்மா நீ நோயுற்ற போதினிலே என்ன நினைத்தாயோ?
நொடியில் ஒரு சாவு வரும் என்று அறிந்தாயோ?
பாயில் ஒரு நாட் கிடந்தால் பாரமெனத் தான் உணர்ந்து
பாதி வழி போனாயோ? நாதி இழந்தேனம்மா !

கொள்ளிக் குடம் சுமந்து கோடியுடை உடுத்து
மெல்ல மயானம் நோக்கி மெய்யிழந்து கொண்டு சென்று
அள்ளி வாய்க்கரிசி தனை அம்மா நான் போட்டு விட்டு
தாயில்லாப் பிள்ளை யெனத் தனியாகிப் போனேனே !

பாலூட்டி வளர்த்தவளே ! அம்மா !
உனக்கு பால் வார்த்தோ அனுப்பினேன் நான்
அம்மா நீ போன இடம் ஆய்தோ ரெல்லாம்
அது நீ செய் புண்ணியமே என்றே சொன்னார்

இம்மாதிரி யார்க்கும் கிடையாதென்றார்
இது நல்ல சாவென்றே இயம்புகின்றார் !
அம்மா ! உனைப் போல் சொந்தம் இம்மாநிலத்தின் இனி யாரம்மா?
அம்மா எனும் உறவு எப்போது மீளவரும்?
இயலாத இழப்பு அது ஈடாகாத துயரம் இது.

## இளைய மகள் சோமமாலினி

மூன்று மாதம் முன்னாலே
உனைத் தேடி வந்தே விரும்பிய படி உந்தன்
பிறந்த நாளை செய்த பெருமையை யடைந்தேன்
தொலை பேசி யூடே உன் பிரிவறிந்து துடிதுடித்தேன்
இறுதியாய் வழியனுப்ப ஓடி நான் வந்தபோதும்
அம்மா! நீ இல்லை என்ற துயர் மாறாது மாறாது
அடுத்த பிறப்பிலும் அடியேன் நின் வயிற்றில்
பிறந்திட வேண்டும் அம்மா!
அம்மம்மா..... அம்மம்மா என்றே
அரற்றுகின்ற பேரர்கள் அசையாத நின்
படத்தை பார்த்தே ஆறுதல்
அடைகின்றனரே அம்மா நீ
ஆறதலைத் தந்தெமக்கு
அமைதி அடைதிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசைமகன் கோகுலவண்ணனின் கண்ணீரலைகள்

கண் விழிக்கும் நேரமதில்
காதினில் கேட்ட செய்தி
இடிபோல் எம் இதயத்தை தாக்க
இவ்வுலகில் நீங்கள் இனி இல்லை - எனும்
உண்மையை எம் உள்மனம்
உணர மறுக்குதம்மா

"என் மகன் தனித்துப்போனான்" என்று
ஏங்கிடும் உங்கள் வார்த்தையின்
அர்த்தம் புரியாமல் - அன்று நான்
அலட்சியமாய் இருந்து விட்டேன்
நீண்டகாலம் இருப்பீர்கள்
என்ற எண்ணமதில் எதிர் வாதங்கள்
செய்து தவிக்க விட்டேன்

காலத்தின் கோலத்தால் என் தந்தையின்
இறுதிச் சடங்கில் பங்கு கொள்ள முடியாமல்
நான் பரிதவித்த காலம் - ஆண்டுகள் இருபத்திரண்டு
ஆகின்ற போதும் என் மனதில் பசுமையாய் பதிந்திருக்க
இன்று என் அன்னையையும் இழந்து தவிக்கிறேன்
ஈடிணையில்லா உம் இழப்பு - வாழ்வில் பேரிழப்பாம்

## கடைக்குட்டி மகன் விஜி

"காலங்கள் பல கடந்து கடைக்குட்டி மகனாக
அம்மா எனைப் பெற்றெடுத்தாய் !
கடைசி யாக கதைத்தபோதும், ஓடிவந்து
கொள்ளி போடு என்றே ஓயாமல் உரைத்தாயே !
ஓடி வந்தேன் உன் கடமை செய்திடவே !
பள்ளி சென்று வந்தாலும் பக்குவமாய் பாலூட்டி
பரவ சமாய் அணைத்திட்ட நினைவு பசுமையாய் நிழலாடுதம்மா
ஓடி நீ சென்றாலும் தேடி எனை வருவாய்
என்ற திருப்தியுடன் வாழுகின்றேன்
என் துணையும் உனை எண்ணி
வெந்து புலம்புகின்றாள் வேதனையில் வாடுகின்றாள்
நேரில் காணாத நிகரில்லா துன்பத்தில்
நித்தம் துவழுகின்றாள் அம்மாவே !
நீயே வந்துதித்து நிம்மதியைத் தந்திடம்மா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் நலம் வாழ நல்லாசி கூறும் தாயே !

உறவுகள் பலகோடி உனக்குண்டு அதனுள்ளும்
உரிமைகள் பல கூறும் மனிதங்கள் மிக உண்டு இருப்பினும்
உன்தன் முன்மகன் என்தன் கண் அவர் ஆனதனால்
நின்தன் மருமகளாம் உறவு பெற்றேன்

மறு உலகம் நீவிர் சென்று
என்தன் மாமாவுடன் இணைந்து
உன் பிள்ளை துணையாள் பேரர்
நலம் வாழ நல்லாசி கூறும் தாயே !

மருமகள்
மாலினி

## இளைய மருமகன் குமார்

"கடல் கடந்த நாட்டில் நின்று
கடமை செய்யாத பாவி நான் மாமி!
தொலைபேசி எடுத்தவுடன் மாமி எங்கே என்றும்
மாமியிடம் கொடுங்கள் என்றும்
மனம் திறந்து சொல்லிடுவேன்
மகளை அனுப்பிவிட்டு மனம் கலங்கி
நின்றேனே நான் இங்கு என்
மாமியின் தீராத ஆசை ஒன்றை தீர்த்து
வைத்த பெருமை பெற்றேன்.
83வது அகவையினை
அமைதியாய் கொண்டாடி ஆனந்தப்
படுத்தி விட்டாய் என்று சொல்ல
வைத்து விட்டீர்கள் மாமியே!
அமைதியாய் கதைத்திடுவீர்
ஆறுதல் சொல்லிடுவீர் புத்தி பல பகன்றிடுவீர்
புரிய பல வைத்திடுவீர் அம்மாவாய்
எண்ணி நானும் அன்பைப் பொழிந்தேனே
ஆறுதல் தந்து நீயும் அமைதியாய் தூங்கிடம்மா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை மருமகள் வசந்தரோகிணியின் அன்பலைகள்

என் பிறந்தநாளில் உங்கள் இறுதிநாள்
என் வாழ்நாள் உள்ளவரை மறக்கமுடியாதம்மா
பிறப்பும் இறப்பும் இறைவன் கணக்குத்தான் - ஆனாலும்
எம்முடன் தொடர்புபட்ட உங்கள் பந்தம் என்றும் முடிவற்றது

அன்பால் அரவணைத்து, ஆறுதல் வார்த்தைகள் கூறி
என் இல்லம் சிறக்க - இனிய நற் துணையும் தந்து
உம் இறுதி மூச்சுவரை எம் குடும்ப நினைவு சுமந்து
ஒளிவிளக்காய் திகழ்ந்த நீங்கள்

நோயுற்ற வேளைகளில் வைத்தியசாலை வரும்போதெல்லாம்
தன் வேலைகளை தானே முடித்து
தொந்தரவு ஏதும் எனக்கின்றி - இறுதியில்
"என் மருமகளை பார்க்க வந்தேன் என்று"
என்னிடம் வந்து செல்வது இனி நான் காணமுடியாதே !
என் சகாக்களுடன் எங்களைப் பற்றி
கவலையுடன் நீங்கள் கூறிடும் வார்த்தைகள்
இனி கேட்க முடியாதே !

வாழ்ந்த காலமெல்லாம் பிறருக்கு உதவிசெய்து
இனிய நற்பண்பால் எல்லோரையும் கவர்ந்து
வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்த
என் அத்தையை இனி நான் காண்பதெப்போ !

## இளைய மருமகள் சுசி

உங்கள் கடைக்குட்டி மகனாரைக்
களிப்புடன் கைப்பிடித்தேன்
உன்னத வாழ்வு கண்டேன் உங்களை நாடிவந்தேன்
நான்கு மாதம் முன்னாலே நான் வந்த வேளையிலே
கண்ணினிலே கருணை பொங்க கட்டியணைத்து முத்தமிட்டீர்
எண்ணிய நின் கனவு தானும் ஈடேறுமுன் சென்றதெங்கே
வந்து நீ பிறந்திடம்மா வரமொன்று தந்திடம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரி பிரிவாற்றாமை

முக்கனிகளாய் பிறந்தோம் பிறந்த வரிசையிலே
பிரிந்து விட்டீர்கள் இருவருமே
தனியாக நிற்கின்றேன் தாளாது தவிக்கின்றேன்
தேடி எனை வரும்போது தின்பண்டம் தந்திடுவாய்
உனைநாடி நான் வந்தால் ஓயாது கதை சொல்வாய்
தவநிதி என்று நீ அழைத்து வரும் குரல் ஓசை
காதினிலே ஒலிக்கின்றதே
நிஜமான அழைப்பினை நான் நித்திலத்தில்
கேட்ப தெப்போ அக்காவே!
செய்வதறியாது திசைமாறி நிற்கின்றேன்
என் உடன் பிறப்பே.

## அக்காவின் துணைவன் துயரம்

காதலித்துக் கரம் பிடித்த - என்
காலம் தந்த கண்மணியின்
கண்ணான தங்கையே !
தயவான மைத்துனியே !
தாராள சிந்தை கொண்ட
புகழ் பூத்த தவத்தாரின்
பூவுலகம் தந்ததுணைவியே !
இலண்டன் மாநகரிருந்து
பிள்ளைகளுடனே நான்
ஓடோடி வந்தேன் - உன்
பொன்னுடலைத் தரிசித்தேன்
அது போதும் என்தனுக்கு
நின் ஆன்மா சாந்தி பெற
ஆண்டவனை இறைஞ்சுகிறேன்.

## மைத்துனர் பழனிவேற்பிள்ளை

மைத்துனியே! மாசில்லா மாமணியே!
பாதையிலே வரும் போதே பழனிவேல் என்று நீயும்
பற்றுடன் அழைத்திடுவாய்!
பாரினிலே இவ் ஓசை பட்டனவே அடங்கியதோ!
பாசத்தால் தவிக்கின்றேன் - உன்சோகத்தால்
சோர் விழந்தேன் நான் அம்மா
சொந்த பந்த மெல்லாம் சொர்ப்பண மாகியதோ
நிஜமாக்கி சென்று விட்டாய் - நீ
இல்லா உலகில் நாம் நிம்மதி யிழந்தோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரமக்கள் துயரம்

ஆசை அம்மா! என்று நாங்கள்
ஆர்வமுடன் அழைத்திடுவோம்
அகிலத்தில் உங்களைப் போல்
அன்புடையோர் இல்லையம்மா
கடல் கடந்த நாட்டில் நின்று
கடமை செய்ய ஓடி வந்தோம்
அக்காவின் பிள்ளைகள் நாம் நிட்சயமாய்
வருவார் என்ற நின் நினைவு நிஜமானதம்மா
ஏனைய பிள்ளைகளும் கனமான வேதனையில்
கண்ணீர் விடுகின்றனரே!
வங்கிக்கு வந்து விட்டால் வருவாயே எமைத்தேடி
வரும்போதே மதி ! நந்தா! என்று சொல்லி
வாயார அழைத்திடுவீர்
விருப்புடனே வந்து நீயும் களிப்புடனே சென்றிடுவீர்
காணாது தவிக்கின்றோம் ! காண்பது தான் எப்போது?
குஞ்சியம்மா என்று நாங்கள் குதூகலமாய் அழைத்திவோம்
குறை ஒன்றும் இல்லாத நிறைவான தாயே நீ!
ஞாயிற்றுக்கிழமை என்றால் நம்வீடு வந்திடுவீர்
நாம் எல்லாம் உவகையுடன் உணர்வை எதிர்பார்ப்போம்
சீரோடு சிறப்பாய் என்றும் பேருடன் புகழ்சேர
நேரிடையாக வாழ்ந்தீரம்மா
கூர்மதியாக நின்றீர் குவலயத்தில் பெருமை பெற்றீர்
பார்மிசை நிங்கி நீங்கள்
பறந்ததன் மாய மென்ன.

## மருமகன் மனத்துயரம்

எங்கள் பாசம்மிகு குஞ்சுமாமாவின்
நேசம்மிகு துணையே !
குன்றாத வாழ்வு தனை
குவலயம் போற்ற வாழ்ந்த குஞ்சுமாமி
உற்றார் உறவு என
உணர்வுடனே உறவாடிய
உன்னத மானவரே !
உங்கள் இன் ஆன்மா
உமை சிவனார் பாதமலர்
சாந்தி கொள்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவாச் சகோதரி துயரம்

கூடி நான் பிறக்கவில்லை அக்காவே !
கூடி பிறந்தது போல் நின் குறையை தீர்த்தேனே !
சின்னவா ! என்று நீயும் என்றுமே அழைத்திடுவாய்
அழைத்த குரலுக்கு அருகில் எல்லாம் நான் நின்றிடுவேன்
வேண்டும் கடமை எல்லாம் விருப்புடனே செய்தேனே
தாய் என்று எண்ணியே தளராது உனைப்பார்த்தேன்
பல நாள் கிடக்காமல் பாதியிலே சென்றுவிட்டாய்
பாரினிலே உனை காண்பதெப்போ
காணாத இடம்தேடி கண்மணியே
சென்றாயே ! காலம் எல்லாம் உனை
எண்ணி கண்ணீர் விட வைத்துவிட்டாய்

## உறவு இழந்தோம் அப்பம்மா

எம் தந்தையை தலை மகனாய் ஈன்றாய்
தனயன் நாமம் கூறும் பேரர்களாய் எமைக் கண்டாய்
அப்பம்மா பென்சன்தனில் அருமருந்தென
தின் பண்டங்கள் தீங்கின்றி நீ தந்தாய்

யாதும் ஊரே யாவரும் கேளீர் என நீவிர் வாழ்ந்ததனால்
ஊர் மெச்ச உறவு போற்ற
இறவாப் புகழுடன் இலங்குகின்றீர்
நின்போல் வாழ எம்மால் முடியாதப்பம்மா !

ஆயினும் எம் நிஜ வாழ்வில்
நின்முகம் மனதிருத்தி
உன் பதம் பணிந்து
என்றும் வாழ்வோம் நாம்.

**அருமைப் பேரர்கள்**
**கேதா, கேதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசைப் பேரப்பிள்ளைகள் கோபிராம், கிருஷ்னியின் எண்ண அலைகள்

ஞாயிற்றுக்கிழமை தோறும் எம் இல்லம் தேடிவந்து
இனிய தின் பண்டங்களும் எமக்களித்து
எம் இன்ப துன்பங்களை நேரில் பார்த்து
பேரப்பிள்ளைகள் நாம் பேதலித்து போகாமல்
தன் அன்பால் எம்மை கட்டியணைத்து

என்றும் எம் நினைவை உம் மனதில் சுமந்து
எம் வாழ்வு சிறக்க ஏற்றவை யாவும் செய்து
"இனி நான் வரமாட்டேன் இது தான் கடைசி" - என்ற
நோய் நிலையில் நீங்கள் கூறிடும் போதெல்லாம்
பொய் வார்த்தை இது என்று நாம் எண்ணியிருந்தோம்
இறுதியில் எம் நினைவை பொய்யாக்கி சென்றுவிட்டீர்களே அப்பம்மா

அப்பப்பாவை நாம் பார்த்ததில்லை
அக்குறையை நீங்கள் வைத்ததில்லை
இருவருக்கும் பொதுவாய் உங்களை நினைத்திருந்தோம் அப்பம்மா
உங்கள் இறுதி மூச்சுவரை எங்களை நினைத்ததை
நாம் அறிவோம் அப்பம்மா

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க
இன்று தெய்வமாகிவட்ட எம் அப்பம்மாவின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் துணை வேண்டி நிற்கின்றோம்.

## கலங்குகிறோம் அப்பம்மா

தூங்குகிறீர்களே குஞ்சப்பம்மா எமை பார்க்க ஓடோடி வருவீர்களே
இனி எப்போ வருவீர்கள் என்று தவிக்கிறது மனம்
ஞாயிற்றுக்கிழமை என்றால் பிஸ்கற்றுடன் வந்து விடுவீர்கள்

வரும்போது பெரியவள் நிற்கிறாளா என்று என்னை அழைத்தபடி
வருவது இன்னும் காதில் கேட்கிறது
பிடித்த பேத்தி பிடித்த பேத்தி என்று கூறி விட்டுப்
பிரிந்து சென்று விட்டீர்களே அப்பம்மா !

வீட்டிற்கு வரும்போதெல்லாம் இனி வரமாட்டேன்
அதில வந்து என்னை பார் விளையாட்டாக
நாங்களும் விளையாட்டாக சும்மா இருங்க அப்பம்மா
அடுத்த ஞாயிறு வருவீர்கள் என்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக சொலும் போதும் நம்பவில்லையே இன்று உண்மையாக்கி விட்டீர்களே
எத்தனை ஞாயிறு வந்து போனாலும் நீங்கள் இனி வரமாட்டீர்களா அப்பம்மா !
எமக்கு அப்பம்மா இல்லாக் குறையை தீர்த்து வைத்தீர்களே

இன்றிலிருந்து நீங்களும் இல்லையா?
நீங்கள் வரும்போது வருத்தமாக நான் படுத்திருந்தால்
பக்கத்தில் வந்து இருப்பீர்களே வெற்றிவை வாய் என்று சொல்லி சொல்லி கொஞ்சுவீர்களே
யார் இனி செய்வாரோ? நம்பமுடியவில்லை அப்பம்மா !

எல்லாரும் போய்ட்டாங்க நான் தான் இருக்கிறேன் என்று கூறி
நீங்களும் சென்று விட்டீர்களா? கனவாக இருக்கக் கூடாதா என
கலங்குகிறோம் அப்பம்மா எப்போ வருவீர்கள் என...

*- அன்புடன் பேரர்கள் -*

## உற்றார், உறவினர், அயல் மக்கள் துயர்

தூய வெண்ணீறு நெற்றியில் பட்டையாய் படர்ந்திடவே
பாதை வழி நீங்கள் பக்குவமாய் நடப்பீர்கள்
கைத்தடியுடனே கையில் தின்பண்டம்
கடுகதியாய் வந்தாலும் களைக்க நாம் விட்டதில்லை,
கண்டவுடன் சிரித்து கதைத்து, முத்தான பல் வரிசை காட்டி
முகம் மலரப் புன்னகைப்பாய்
கால்கள் ஓய்ந்ததுவோ, காலன் உனை அழைத்தானோ !
சொற்ப நாட்களுள்ளே சொர்க்கம் சென்ற தாயே
நின் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம் நாம் இங்கு

## தேற்றம்

பிற்பபு இல்லாமலே நாளொன்று மில்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் மில்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போலொரு மாமருந்தில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்துஅழகுஎறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல்திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூக்ஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலம் ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்று எழுபாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்து எனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண கவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த வழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொகமொகமொகமொகமொகமொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டகுடிகு டங்கு டிங்குடு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்ளனை யாளும் ஏரகச் செல்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் வேண்டும் வரமகிழ் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு வழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணிகைக் காக்க
வழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்னகை யிரண்டும் முரண்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி ல்நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவும் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் செக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணா ளரசரும் மகிழ்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகணன்றாய்
என்னா விருக்க யான் உனைப்பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் னாடினேன் பரவசமாக
ஆடினேன் னாடினென் ஆவினன் பூதியை
நேசமுடன்யான் நெற்றியிலணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பாதம் பெறவே உன்னருளாக
அன்புடன் நிரனி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைகணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்
கந்த சஷ்டிகவசம் மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவாகள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டத்திற்குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயல தருளவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
லழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி காக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

(கந்த சஷ்டி கவசம் முற்றிற்று)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு) இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் (1)

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ(து) இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீ சீ இவையும் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குத்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் (2)

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தமடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் (3)

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞானலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென் (று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். (5)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல் பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர் க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் (6)

அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என் னமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றேல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்(7)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் (8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
ஏன்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய். (9)

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதொழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன் றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். (10)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
ஊய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
ஏய்யாமற் காப்பாய் எவையேலோர் எம்பாவாய். (11)

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய் (12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
ஆங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (13)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடலோர் எம்பாவாய். (14)

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் சித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் (15)

முன்இக் கடலைச் சுருக்கி யெழுந்து (உ)டையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தெம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் (16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாதாகக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் (17)

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்(18)

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்(கு) அப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக் கொன் றுரைப்போங் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேர ற்க
எங்கை உனக்கல்லாதெப் பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றென்றுங் காணற்க
இங்(கு) இப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய். (19)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய் (20)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதுள்ளம் என்றும் மறவாது உரைக்கும் நன்றி



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

28-11-2018 புதன்கிழமை சிவபதப்பேறடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்
**அமரர் திருமதி. சங்கநிதி தபானந்தம்**
இறைவன் திருப்பாதம் சங்கமித்த செய்தி கேட்டு
உடன் வந்து உதவிய உற்றார், உறவினர்,
அயலவர், நண்பர்கள், தொலைபேசி மூலம்
நாட்டின் பல்வேறு திசையிலிருந்தும்,
வெளிநாட்டில் இருந்து துயர்பகிர்ந்த
உறவினர்கள், நண்பர்கள் அமரரின்
இறுதி யாத்திரையிலும், அந்தியேட்டி,
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில்
கலந்து கொண்டவர்களுக்கும்
கிரியைகள் சிறப்புறச் செய்த
அந்தணப் பெரியோர்க்கும்
அழைப்பிதழ், நினைவுமலர்
அச்சிட்டு உதவிய கொக்குவில்
சோதிடப்பிரகாச யந்திரசாலை அச்சகத்தினருக்கும்
எமது உள்ளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

இல. 59, பொற்பதி வீதி,
கொக்குவில்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைதீவு சேது காவலமுதலி மரபு வழிவந்த குமரப் பெருமாள், வை
உயர்திரு. செல்லத்துரை தபானந்தம் அவர்களின் பிரியபத்தினி

## வம்ச விருட்சம்

**ஆறுமுகம் + சின்னப்பிள்ளை**

பதுமநிதி *
+
அருணாசலம்

கிருபாகரன் + தவமலர்
திவாகரன் + நிரோஜன்
பிரபாகரன் + சந்திரகாந்தி
அருள்நிதி + ஜீவானந்தன்
இசைவாணி + நிர்மலன்
லலிதா + பகலவன்

**சங்கநிதி** *
+
**தபானந்தம்** *

தவநிதி
+
பழனிவேற்பிள்ளை

மதிமாறன் + நந்தினி
திருமாறன் + சுரேக்கா
மதிவதனா + யோகானந்தம்
இளமாறன் + சுபத்திரா

பவளம்மா *
+
தம்பியப்பா *

வியாழ
+
ஆறுமு

* சச்சிதானந்தபிள்
* சதான
* நித்தியா
ஏகானந்தசி

கிருபவானி
+
சரவணபவன் *

கிருபவன்
சாம்பவன்
பிரணவன்
சாயுக்சன்

ஒளிவண்ணன்
+
வசந்தமாலினி

கேதாரணி
தவகேதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப் பெருமாள், வைரமுத்து, ஐயம்பிள்ளை வழித்தோன்றல்
ரின் பிரியபத்தினி சங்கநிதி தபானந்தம் அவர்களின்

விருட்சம்

**செல்லத்துரை + சின்னம்மா**

வியாழம்மா *
+
ஆறுமுகம் *
↓
* சச்சிதானந்தபிள்ளை + சாட்சாயினி
* சதானந்தசிவம்
* நித்தியானந்தசிவம்
ஏகானந்தசிவம் + மீரா

பரமானந்தம் *
+
பூங்காவனம் *
↓
லோகேஸ்வரன்
பிரகதாம்பாள்

அருளானந்தம் *
+
உலகேஸ்வரி *
↓
ஸ்ரீ பத்மராசா + யோகநிதி
ஸ்ரீ பத்மினி + தருமராசா
ஸ்ரீ ரவீந்திரராஜா + ஜெயகௌரி

**தபானந்தம்** *
+
**சங்கநிதி** *

ன்

ணி

சோமமாலினி
+
நந்தகுமார்
↓
பிரியங்கன்
லதுசன்

கோகுலவண்ணன்
+
வசந்தரோகிணி
↓
கோபிராம்
கிருஷ்ணி

விஜயபாமன்
+
சுசிலா

* அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சோதிடப் பிரகாச யந்திரசாலை, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org